## வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிர்மாண வேலைகளின் ரூபா 52,368,026 பெறுமதியான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் நடைபெறும் வேலையாக காட்டப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மிருகங்களிற்கான கூடுகளை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 812,496 தொகை மூலதனமாக்கப்படாமல் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | இது கூடுகளிற்குரிய திருத்தங்கள் தொடர்பான செலவினமொன்றாக காணப்பட்டதனால் அத்தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தலைமை அலுவலகத்தின் களஞ்சியங்களில் காணப்பட்ட பல்வேறு மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவக் கருவிகளின் 171 உருப்படிகளுக்குரிய கிரயம் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | களஞ்சியங்களில் காணப்பட்ட மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ கருவிகளின் இருப்பு மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | தலைமை அலுவலகத்தின் கால்நடை பிரிவிலுள்ள இருப்பு நிதிக்கூற்றுக்களில் ரூபா 74,740 இறுதி இருப்பாக காட்டப்பட்டிருந்ததால் தலைமை அலுவலகத்தின் களஞ்சியங்களில் உள்ள இருப்பு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட வேண்டும் |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய தொகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலுத்த வேண்டிய சேவைக் கட்டணக் கணக்கில் 05 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 10,679,146 மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதியிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆண்டிற்கான சம்பள ஏற்றங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிற்கு மாத்திரம் சேவைக் கட்டணங்கள் செலுத்தப்படுகின்றதனால் அவ்வாறு செலுத்தப்பட்டிருக்காத உத்தியோகத்தர்களின் சேவைக் கட்டணங்கள் சம்பள அதிகரிப்புக்கள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்வதற்காக நிறுத்தி வைக்கப்பட வேண்டியிருந்தன. | செலுத்த வேண்டிய தொகைகள் நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்படாமல் முறையாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் 2009 நவம்பர் 08 ஆந் திகதிய 05/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | சட்டப் பிரிவில் கைத்துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்காததுடன் மாதாந்த அறிக்கைகள் வலய அலுவலகங்களால் சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | சட்டப்பிரிவில் கைத்துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் தொடர்பான பதிவேடொன்று காலக்கிரமத்தில் பேணப்படுவதற்கும் மாதாந்தம் வலய அலுவலகங்களில் இருந்து உரிய மாதாந்த அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 இன் மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவக் கருவிகளின் பெறுகைக்கான வழிகாட்டல்கள் | ரூபா 13,324,020 பெறுமதியான மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்யும் போது பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | 2006 இன் மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவக் கருவிகளின் பெறுகைக்கான வழிகாட்டல்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமனம் செய்வதற்கும் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் என்னால் காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 1,871,142,266 மிகையொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,546,489,131 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 324,653,135 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. பூங்கா நுழைவுக் கட்டணங்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள் முறையே ரூபா 350,476,437 மற்றும் ரூபா 56,413,113 ஆல் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக உள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டளவில் அருகிவரும் வனசீவராசிகள் மற்றும் தாவர இனங்களின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான மாநாட்டின் (CITES) 17 ஆவது கூட்டத்தொடரில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அடிப்படையாகக்கொண்டு கால்நடைகள் மற்றும் தாவர வியாபாரம் மற்றும் இனவிருத்தி செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதற்காக இலங்கைக்கு பொருத்தமான புதிய சட்ட முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு வேண்டப்பட்டிருந்த போதிலும் 2019 ஏப்ரல் 30 வரையிலும் சட்ட முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரமாணங்களை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக சட்ட வரைபுகள் தயாரிக்கப்பட்டு பல ஆண்டுகளிற்கு முன்னர் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது அதனை சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கைக்கு பொருத்தமான புதிய சட்டமுறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கால்நடைகள் மற்றும் தாவரங்களின் வியாபாரம் காரணமாக கால்நடைகள் மற்றும் தாவரங்களின் பாகங்களிற்கு ஏற்பட்ட தாக்கத்தை ஆய்வு செய்வதற்காக கள பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஒக்தோபர் வரையான காலப்பகுதியின் போது இடம்பெற்ற 75 இறக்குமதி சந்தர்ப்பங்களுக்குரிய 08 சந்தர்ப்பங்களில் மாத்திரமே களப்பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. Borneo Exotics பெயருடைய பாதுரா (Pitcher Plants) ஏற்றுமதி நிறுவனம் தொடர்பாகவும் 2013 ஆம் ஆண்டின் பின்னர் களப்பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | Borneo Exotics (Pvt) Ltd இற்கான களப்பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட முடியாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் கள பரீட்சிப்பு ஒன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டிருந்தது | இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் காரணமாக ஏற்பட்ட தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு கள பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 527,620 பெறுமதியான 227 கிலோகிராம் ஊட்டச்சத்து விற்றமின் (Stress Vitamin) 2018 ஆகஸ்ட் 23 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ் இருப்பு முழுவதும் உடவலவ யானைகள் இடைத்தங்கல் இல்லத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. அதில் 98 கிலோகிராம் மருந்துகள் 2019 ஒக்தோபரில் காலாவதியாகுவதுடன் அவற்றின் பெறுமதி ரூபா 258,006 தொகையாகும். | கால்நடை வைத்தியரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் மற்றும் வலயத்திற்கு பொறுப்பான பணிப்பாளரின் (சுகாதாரம்) பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு மிருகங்களிற்கான மருந்துகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அதற்கிணங்க ஊட்டச்சத்து விற்றமின் பெயரிலான மருந்து பெறுகை வழிகாட்டல்களிற்கிணங்க கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இது தற்போது உடவலவ யானைகள் இடைத்தங்கல் இல்லத்தில் மிருகங்களிற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன | தேவைப்பாடு முறையாக இனங்காணப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டில் ரூபா 11,730,808 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வில்பத்து தேசிய பூங்காவில் அமைந்துள்ள கொல்லன்கனட்ட (வீவல) சுற்றுலா விடுதி நீர் விநியோக சிக்கல்கள் காரணமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தது. | நீர் விநியோக சிக்கல்களை தீர்ப்பதற்கும் காலக்கிரமத்தில் சுற்றுலாப் பயணிகளிற்காக இதனை திறப்பதற்கும் நான் எதிர்பார்க்கின்றேன். | நீர் விநியோக சிக்கல்களை தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடல் பறவைகளின் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட Wave Rider படகு மற்றும் என்ஜின்களிற்காக ரூபா 5,868,600 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2019 ஆம் ஆண்டின் போது உத்தரவாதக் காலப்பகுதி காலாவதியாகியிருந்த போதிலும் பயன்படுத்தப்படாமல் மிரிஸ்ஸ துறைமுகத்தில் விளைவற்றிருந்தது. | இக்கப்பல் தற்போது கடற் பிரயாணத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றதுடன் ஆழ்கடல் பிரயாணத்திற்காக கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் உதவியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | தாமதமின்றி கப்பலை பயன்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தலைமை அலுவலகத்திற்குரிய புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,322,500 தொகையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் ரூபா 1,264,500 முற்பணம் 2017 செப்தெம்பர் 11 இல் செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகள் 2018 பெப்ரவரியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 ஏப்ரல் 30 அளவிலும் நிர்மாணங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 15 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது. | நிர்மாண வேலைகளை மேற்கொள்ளும் போது மதிப்பீட்டின் பிரகாரம் கூரை நிர்மாணம் பிரதான கட்டிடத்தினை தோற்றத்துடன் பொருத்தமற்றிருந்ததால் ஏற்கனவேயுள்ள மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்ட போதிலும் 24.2 சதவீத அதிகரிப்பொன்றாக இது இருந்தது. இது பெறுகைக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான 10 சதவீத எல்லையை விஞ்சியிருந்ததால் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |